# சித்தர்களும் சக்தி ஆதாரங்களும்

55

முனைவர் சு.பரணி,
தமிழ்த்துறைத் தலைவர்(பொ)
அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனம்
கோயம்புத்தூர்-43
bharani_tam@avinuty.ac.in
Orcid Id 0000-0002-7736-1205

**ஆய்வுச்சுருக்கம்**

சித்தம் தெளிந்தவர்கள் சித்தர்கள். அவர்கள் தங்களுக்கென வாழாது மக்கள் பயனுர வாழ்ந்தவர்கள். தாங்கள் அறிந்த சித்து வைத்து மனிதர்களின் நோய்களையும் பிரச்சினைகளையும் தீர்த்து வைத்தவர்கள். இவ்வுலகம் பஞ்ச பூதங்களால் ஆனதைப் போன்றே உடலும் ஐம்பூதங்களால் ஆனாது. இதனையே அண்டத்தில் உள்ளது பிண்டத்தில் என்பது சித்தர் வாக்கு. இவ்வுலகத்திலும் மானிட உடம்பிலும் பொதிந்துள்ள தத்துவம் ஒன்று என உணர்த்தவர்கள். ஐம்பூதங்களும் ஐந்து சக்கரங்களில் நிலைபெற்றிருக்கும் தன்மையை எடுத்துரைத்தவர்கள்

**திறவுச்சொற்கள் :** மூலாதாரம்- சுவாதிட்டானம்-மணிப்பூரகம்- அனாகதம்- விசுத்தி- ஆக்கினை

**முன்னுரை**

‘யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்’ எனச் சித்தர்களின் வாழ்வியல் நெறிகள் சமுதாய நோக்கோடு அமைந்திருந்தன. மனித உடம்பில் நிலைக்கொண்டுள்ள ஆற்றல்களை ஆறு ஆதாரங்களான மூலாதாரம் தொடங்கி ஆக்கினை வரை உள்ள நிலைகளை எடுத்துரைப்பதாக அமைகிறது.

**சித்தர்கள்**

ஆன்மீகத்திலும் அறிவியல் நிலைகளிலும் தன்னை ஈடுபடுத்தி முழுமையாக சித்தி அடைபவர் சித்தர். சித்தர்கள் தங்களின் தேடல், தளமும், பரப்பும் கடந்து இறைமையின் எல்லையை விரிவுபடுத்துகின்றனர். இயற்கையின் இயல்பான நிலையில் தங்களைக் கரைத்துக் கொண்டு கடவுளைத் தேடும் முயற்சியில் காடு, மலை, கடல், ஆறு எனத் தன் விருப்பம்போல மனிதர்களுக்கு இடையே வாழ்ந்து விலகாமல் விலகிச் சாராமல் சார்ந்து இந்த பிரபஞ்சத்தினூடே பரவெளியில் ஜீவன் சித்தர்களாக வாழ்ந்தவர்கள். இயற்கையை இயைந்து உண்டு, உய்த்து, உணர்ந்து வாழப்பழகியவர்கள் சித்தர்கள். பரவெளியில் சுயமான அனுபவங்களை, ஆன்மீகமும் அறிவுக்கும் எந்தவித பாதிப்புக்கு உட்படாத வண்ணம் சில நேரம் விதந்தும் உணர்வுகளாக்கிப் பாடல் பாடியவர்கள். எதையும் அலட்சியப்படுத்தாமல், எல்லாவற்றிலும் ஓர் அக்கறை கொண்டு,

உற்றுப் பார்த்து உண்மை தேட வேண்டும். சூக்குமம் அறியவேண்டும். இருப்பதையும் கிடைப்பதையும் தேடுவதையும் முதலில் தனதாக்கி மனதில் போட்டுக் கொள்ளவேண்டும். அது உங்களின் தேவைக்கு ஏற்பச் சல்லடை போட்டுக் கொள்ளும். தேர்ந்து எடுத்துக் கொள்ளும். படைப்புக்கு இந்தத் தேடலும் தேர்வும் மிகவும் முக்கியம். இது வேலைமெனக் கெட்டதல்ல இயல்பானது. உணர்வுடையது, ஆழமாகவும் அமிழ்ந்தும் கிடக்கிற உண்மைகளைத் தேடிப்பிடிக்க வேண்டியிருக்கிறது (கவிதையெனும் மொழி, தி.சு.நடராசன், ப.11, 2008). கடவுளை வெறுத்தவர்கள் என்று கருதஇடமளிக்கவில்லை. இவர்கள் இயற்கையிலே இறைவனைக் கண்டவர்கள். சித்தர்கள் கடவுள் கொள்கை, மருத்துவம், உடலியல் கூறுகள், சமயத் தத்துவங்கள், சமூக முரண்பாடுகள், இப்படியாக அவர்களின் பரப்பு விரிவடைந்த போதும் ஆறு சக்தி மையங்கள் அதன் செயற்பாடுகள் மற்றும் வண்ணங்கள் ஆகியவற்றின் தன்மைகளுக்கும் உள்ள சக்தி தொடர்புகளை சித்தர்களின் பார்வையில் ஆராய்வது நோக்கமாகும்.

**ஆறு ஆதாரங்கள்**

ஆறு ஆதாரங்கள் என்பது உடலின் சக்தி மையங்கள் ஆகும். இது நாளமில்லாச் சுரபிகளுடன் தொடர்புடையது. இவை சரியாக இயங்கினால் நோய்கள் வராது: உடலினைக் காக்க இயலும். மனித உடலில் 72000 நாடிகள் உள்ளன. அவற்றை இயக்கும் சக்தி ஆறு சக்கரங்களுக்கே உள்ளன என சித்தர்கள் கணித்துள்ளனர் அது பௌதிக உடலில் முதுகுகெழும்பின் அடியில் ஆரம்பித்து தலைக்கு மேல்நோக்கி செல்கிறது. மூலாதாரம், சுவாதிட்டானம், மணிப்பூரகம், அனாகதம், விசுத்தி, ஆக்கினை ஆகியன . அவை,

பாரு நீ யாறா தாரப் பரிசது பகரக் கேளாய்
சீர்பெறு மூலா தாரஞ் செப்பிடு சுவாதிட் டானம்
ஏர்மணி பூர கத்தோ டனாகதம் விசுத்தி தேற்றம்
சேருமாக் கினையா றென்னத் தெரிந்தவர் செப்பி னாரே
(அங்காதிபாதம் பா: 99,)

என ஆறு ஆதாரங்களைப் பாடியுள்ளார்.

**மூலாதாரம்**

எல்லாவற்றிற்கும் பூமி ஆதாரமாக இருப்பது போல மனித உடலுக்கு ஆதாரம் இது. மனித உடலில் ஆசனவாயிற்கு இரண்டு விரற்கிடை மேலேயும் உயிர்நாடிக்கு இரண்டு விரற்கிடை கீழேயும் இச்சக்கரம் உள்ளது. முதுகுகெழும்பின் அடியில் இருக்கிறது. குண்டலினி என்னும் சிவப்பு நிற சக்தி நாபிக் கமலத்திற்கு நால்விரற்கிடை கீழே உள்ளது. மனிதன் இயங்க முழுமுதற் காரணமாக அமையும் சக்கரம்.

மூலத்திரு விரல் மேலுக்கு முன்னின்ற பாலித்த
யோனிக் கிருவிரல் கீழ்நின்ற

கோலித்த குண்டலி யுள்ளெழுஞ் செஞ்சுடர்
ஞாலத்து நாபிக்கு நால்விரல் கீழதே -திருமூலர், திருமந்திரம், பாடல் 580

என மூலதாராத்தைப் பற்றி திருமூலர் எடுத்துரைக்கின்றார். மூலாதாரம் பிரபஞ்சம் போன்றது. இது முக்கோண வடிவில் இருக்கறது. மூன்று வளையங்களை உடையது. அதனைச்சுற்றி நான்கு இதழ் தாமரை உள்ளது.

காணவே மூலமது அண்டம் போல
காரணமாய் திரிகோணமாகி நிற்கும்
பூணவே மூன்றின்மேல் வளையமாகும்
புறம்பாக இதழதுதான் நாலுமாகும்
நாணவே நாற்கமலத்து அட்சரங்கேளு
நலமான வ ய ந ம சி ரீரீயாகும்
மூணவே முக்கோணத்து ஓங்காரம்
உள்ளொளி முயற்சியால் அகாரமாச்சே அதற்குள்ளே போகர் 7000 – பா:11

இச்சக்கரம் உரிய மந்திரமாக ஓம் என்னும் பிரணவ ஒசையுடன் இருக்கிறது என போகர் குறிப்பிடுகின்றார்.

மேருவ தான வீட்டில் விளங்கிய கணேசன் றன்பற்
சேரும்வல் லபையி னோடு சிறந்துவீற் றிருந்து வாழ்வன்
ஆருமங் கறியொ ணாவீ டருங்கதி கொடுக்கும் வீடு
நேரிலா மூல வீடு நித்திய மான வீடே (அங்காதிபாதம் பா: 68)

மூலாதாரத்தில் மனம் வைத்து தியானம் செய்யும் பொழுது கணபதியும் வல்லபையும் இதன் அதிபதியாக உள்ளனர். இதன் நிறம் சிவப்பாகும்.

**சுவாதிட்டானம்**

மூலாதாரம் இரண்டு விரற்கிடையில் சுவாதிட்டானம் உள்ளது. இது பிரம்மன் மற்றும் சரஸ்வதி இருக்குமிடம். ஆறிதழ் தாமரை போன்றிருக்கும். கருப்பை மற்றும் விந்தணுக்களுடன் தொடர்பு கொன்டு இனப்பொருக்க உறுப்புக்களுடன் இச்சக்கதமானது இணைகிறது.

துதிசெய்து மூலத்தைத் தாண்டி அப்பால்
துடியான நாலங் குலமே தாண்ட
பதிசெய்த பிரம்மனுட வீடுமாகும்
பகர்ந்த சுவாதிஷ்டானம் என்றுபேரு
அதிசெய் நால்வட்டாக வலயஞ்சுத்தல்
ஆறிதழ் தானட்சரத்தை அறியக்கேளு
பதிசெய்த சுயபிரமர் யாரவர்தான்
பாங்கான நடுபீசம் லங்நங் ஆமே போகர் 7000 – பா:43.

என்று சுவாதிஷ்டானம் பற்றி குறிப்பிடுகிறது. இதனை அங்காதிபாதம் நூலும் பின்வருமாறு எடுத்துரைக்கிறது.

வீடிது தனக்கு மேலாய் விளங்கிய சுவாதிட்டானம்
கூடிதமாறு நான்கு கோணநவ் வெழுத்தைக் கொள்ளும்
பீடுறு துரியா தீதப் பெரும்பதி பிரம னோடு நாடிய
வாணி யாங்கே நயந்துறைந் திடுவ ராமே (அங்காதிபாதம் பா: 69)

சுவாதிஷ்டானம் செயற்பாடுகளை அங்காதிபாதம் பகர்கின்றது.

**மணிப்பூரகம்**

சுவாதிட்டானத்திற்கு மேல் 6 விரற்கிடை மேல் ஈருக்கும் நாடி மணிப்பூரகம். உடலில் உள்ள அனைத்து நாடிகளுக்கும் வேர்ப் பகுதியாகும். குற்றமற்ற பிறைச்சந்திரன் போன்று பத்துத் தாமரை வடிவம் கொண்டது. இத்தலம் பஞ்ச பூதங்களில் தண்ணீர் ஆகும். வங் என்னும் மந்திரம் மணிபூரகத்திற்குரியது. விஷ்ணு – இலக்குமி இதன் அதிதேவதைகளாகும்.

மாலினுட வீடதுதான் அறுவிரலின் மேலே
மாசற்ற பிறைபோலே கோட்டையாகும்
மாலினுட வளையம்போல் பத்திதழ்தான்
மகத்தான அட்சரத்தின் பயனைக்கேளு
தாலினுட ஜனகமா முனியின் தாயார்
தயங்காத நரபர்ப்பர் தன்மை யாகும்
ஆலினுட மங்நடுவில் பூதம் அப்பு
அதன் பீசம் வங்கென்று அறியலாமே போகர் 7000 : பா 48

என்ற பாடலால் அறியலாம்.

**அனாகதம்**

அறிவால் உள்நோக்கிப் பார்த்தால், திருமாலின் தலமாகிய மணிபூரகத்திற்கு எட்டு அங்குலவிரற்கிடை மேல் உள்ள தலம் அனாகதம். பன்னிரண்டிதழ் தாமரை போன்றது. அடர் சிவப்பு நிறத்தில் உள்ளது. இது அக்னி பூதத்துடன் தொடர்புடையது. இதய சக்கரம் எனவும் அழைக்கப்படும். பச்சை நிறத்தில் இருக்கும். ருத்திரன் – பார்வதி அதிதேவதை யாவர்

அறிவுக்கு மேலேறி எட்டங்குலத்துக்கு
அப்பால் கேளு அனாகதத்தின் வீட்டைக்
முறிவுக்கு முக்கோணமாகி நிற்கும்
முதிர்வளையம் பன்னிரண்டு இதழுமாகும்
பிறிவுக்கு காகா கா காங ச சா
பேரான ச ச ஞாடா டாவாகுமே
இறிவுக்கு இதழில் நிற்கும் அட்சரந்தான்
ஏற்றுமாஞ் சுழுத்தியதுக்கு இருப்புமாகும் (போகர் 7000 : பா 54)

என்ற பாடல் மூலம் அறியலாம்.

**விசுத்தி**

அனாகதத்திலிருந்து 12 விரற்கிடை இச்சக்கரம் உள்ளது இது தொண்டையில் அமைந்துள்ளது. அறுங்கோண நட்சத்திர வட்டம் போன்றிருக்கும். பதினாறு இதழ் தாமரையாகும். பூதங்களில் வாயுடன் தொடர்புடையது. இதன் நிறம் நீலம். மகேஸ்வனும் மகேஸ்வரியும் இங்குண்டு.

அறிவுக்கு மேலேறி எட்டங்கு லத்துக்கு அப்பால்
அனாகதத்தின் வீட்டைக் கேளு
முறிவுக்கு முக்கோணமாகி நிற்கும்
முதிர்வளையம் பன்னிரண்டு இதழுமாகும்
பிறிவுக்கு காகா கா காங ச சா
பேரான ச ச ஞாடா டாவாகுமே
இறிவுக்கு இதழில் நிற்கும் அட்சரந்தான்
ஏற்றுமாஞ் சுழுத்தியதுக்கு இருப்புமாகும் (போகர் 7000 பா : 54 )

என்ற பாடல் மூலம் அறியலாம்.

**ஆக்கினை**

இது விசுத்தி சக்கரம் 11 விரற்கிடை இச்சக்கரம் அமைந்துள்ளது. இரண்டு புருவங்களுக்கு மத்தியில் உள்ளது. ஆன்மாவிற்கும் பரமாத்மாவிற்கும் இடையேயான சந்திப்பு ஏற்படும் இடம். இச்சக்கர ம் வட்ட வடிவில் இரண்டிதழை உடையது. இது ஆகாயத் தத்துவதத்திற்கு உரியது. சதாசிவம் மற்றும் மனோண்மணி இதன் அதிதேவதைகளாகும்.

மேலேறி இரண்டு புருவமத்தியில்
மிகையான அண்டம்போல் நிற்குமப்பா
வாலேறி வட்டமாம் வீடுபோலே
வளையமொன்று இரண்டிதழ்தான் ஷா ஷிரி வாகும்
ஆலேறி அங்கென்ற அட்சரந்தான் நடுவே ஆகாச பூதமாம் பூத பீசம்
மாலேறி மனோன்மணியும் சதாசிவனும் நிற்பார்
மவத்தை தான் வீடுமாமேசாக்கிரத்தின் போகர் 7000, பா 69
தலமிதன் மேல தாகத் தங்குமாக் கினை தான் வட்டம்
உலையுமூன் றிதழா கார முரியசாக் கிரத்தின் வீடு
தொலைவறு சதாசி வந்தான் றூமனோன் மணியி னோடே
அலகிலா வருளி னோடு மரசிருந் தளிப்ப னாமே (73)

என்ற பாடல் ஆக்கினை குறித்த தகவல்களை எடுத்துரைக்கின்றது. ஆக்கினை சக்கரத்திற்கு மேலே சகஸ்ர சக்கிரம் உள்ளது. ஆயிரம் இதழ்களை உடைய தாமரை. அதன் அமைவிடம்

உச்சந்தலை ஆகும். ஆக்ஞை சக்கரம் வரையிலான ஆறு சக்கரங்களையும் திறக்கமுடியும். சகஸ்ராரச் சகஸ்ராரச் சக்கரத்தினுள் குண்டலினி நுழைந்தால் எத்தகைய உணர்வு நிலை ஏற்படும் என்ற கேள்விக்கு, "கண்டவர் விண்டிலர்; விண்டவர் கண்டிலர்' என்பதையே பதிலாகக் கூறமுடியும்.

தானான் மனோன்மணியை அப்பால் தாண்டி
தனித்ததோர் எட்டுவிரல் மேலேகேளு
கோனான குருபதம்தான் கூட்டிப்பாரு
குறிப்பான இதழ்களோ ஆயிரத்தெட்டு
ஆனான நடுமையம் ஐங்கோணமாகும்
அகாரம் உகாரமொடு மகாரமாகும்
நானான நாதமொடு விந்து அஞ்சும்
நலத்த வைங்கோணத்தில் நிற்கும் பாரே போகர் 7000, பா 75.

என்ற பாடல் மூலம் குண்டலினி சக்தி ஆறு ஆதாரங்கள் வழியாக சகஸ்ராரச் சக்கரத்தினுள் நூலைவதால் கிடைக்கும் குருபத பேரின்ப நிலையை அறியலாம்.

**முடிவுரை**

ஆறு ஆதாரங்களை சக்தி உறுப்புக்களாக உள்ளன. மூலாதாரத்தில் ஒடுக்கப்பட்ட கிடந்த பஞ்சபூத சக்தி ஆதாரங்களின் வழியாக மேலே ஏறி குண்டலினி சக்தியாக மாறியுள்ளது.

**துணைநூற்பட்டியல்**


1. அங்காதிபாதம் , அருள்மிகு தண்டபாணி திருக்கோயில் சித்த மருத்துவ நூல் வெளியீடு, 1976
2. முனைவர்.ஆ.கருணாநிதி, சித்தர் இலக்கியங்களில் சமூகப்பார்வை, பாவை பப்ளிகேஷன்;ஸ், சென்னை.2007
3. சாமி சிதம்பரனார், சித்தர்கள் கண்ட விஞ்ஞான தத்துவம் , மணிவாசகர் பதிப்பகம், சென்னை 2001
4. சோ. சிவசண்முக ராஜா, சித்த மருத்துவ மூலத்தத்துவம், சித்த மருத்துவ வளர்ச்சிக் கழகம், யாழ்ப்பானம். 2002
5. கே.ஆர். சிவகாந்தன், சித்தர்கள் தத்துவமும் யோக நெறிமுறைகளும், சைவ சிசத்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை. 2003
6. போகர் 7000 அருள்மிகு தண்டபாணி திருக்கோயில் சித்த மருத்துவ நூல் வெளியீடு, 1975
7. திருமுருகன் , சித்தர் பாடல்கள், சாகத்திய அகாதெமி புதுதில்லி, 2012
8. திருமூலர், திருமந்திரம் மூலமும் உரையும், உமா பதிப்பகம், சென்னை 2003.